


**29. 04. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான, நிலைப்பாட்டை ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள் மேலும் வலுப்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. மேற்கு வங்கத்தில் நடைபெறும் 2-வது கட்ட சட்டப்பேரவை தேர்தலில் பகல் ஒருமணி நிலவரப்படி 61.11 சதவிகித வாக்குகள் பதிவாயின.

3. வாக்கு எண்ணும் பணிகளை கண்காணிக்க வெளி மாநில தேர்தல் பார்வையாளர்கள் தமிழகம் வர இருப்பதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

4. கபினி அணையிலிருந்து, தமிழகத்திற்கு 2 . 5 TMC தண்ணீரை திறந்து விட கர்நாடக அரசுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

5. கஸகஸ்தான் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் மானஸ் தாம்னே முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖❖❖

## பிரதமர்

5 மாநில சட்டப்பேரவை தேர்தலில் பி.ஜே.பி. வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை பெறும் என்று பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ஹர்தோயில் 594 கிலோ மீட்டர் நீளமுள்ள கங்கா விரைவுச் சாலையை இன்று நாட்டிற்கு அர்ப்பணித்து உரையாற்றிய அவர், வரும் 4-ம் தேதி வெளியாகும் சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான, தீர்க்கமான உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்தும் என்றார்.

சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள் நாட்டின் மேம்பாட்டிற்கு புதிய ஆற்றலையும், சக்தியையும் வழங்கும் என்று குறிப்பிட்டார்.

கங்கா விரைவுச் சாலை நாட்டின் பிற விரைவுச் சாலைகளுடன் இணைக்கப்படும் என்று கூறினார்.

குஜராத் உள்ளாட்சி தேர்தல்களில் பி.ஜே.பி. 85 சதவிகித வெற்றியை பதிவு செய்திருப்பதை சுட்டிக்காட்டிய அவர், 2-ம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் மேற்கு வங்கத்தில், ஏராளமான வாக்காளர்கள் வாக்குப்பதிவு செய்து வருவதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

மக்கள் அச்சமின்றி வாக்களித்து வருவது, நாட்டின் அரசியல் சாசனத்தின் எழுச்சியையும், வலுவான ஜனநாயகத்தின் அடையாளத்தையும் பிரதிபலிப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

மேற்கு வங்க மக்கள் திரண்டு வந்து தங்களது ஜனநாயக கடமையை ஆற்ற பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

மேற்கு வங்கம்

மேற்குவங்க மாநிலத்தில் 142 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான 2-வது, இறுதிக்கட்ட வாக்குப்பதிவு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

பகல் ஒரு மணி நிலவரப்படி 61.11 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை தொடர்ந்து நடைபெறும்.

இத்தேர்தலில் ஆயிரத்து 448 வேட்பாளர்களின் வெற்றியை,
3 கோடியே 22 லட்சம் வாக்காளர்கள் நிர்ணயிக்கின்றனர்.

முன்னதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தமது சமூக வலைதளப்பதிவில் இத்தேர்தலில் மகளிர், இளம் வாக்காளர்கள் உட்பட அனைவரும் அதிகளவில் வாக்களிக்க வேண்டுகோள் விடுத்தார்.

மேற்கு வங்கத்தில் இன்றைய தேர்தல் வாக்குகளுடன் முதல்கட்ட வாக்குப்பதிவில் பதிவான வாக்குகள் மற்றும் தமிழகம் கேரளம், அசாம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் 4-ம் தேதி எண்ணப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖

பியூஷ்கோயல்

காலநிலை மாற்றம் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எட்டி சிறப்பாக செயல்படும் நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் காலநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்வது தொடர்பான கூட்டத்தில் இன்று உரையாற்றிய அமைச்சர்,

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் காலநிலை மாற்ற செயல்திட்டம் தேசத்தின் பொருளாதார

வளர்ச்சிக்கான நிலைப்பாடாக உருவாகி உள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

காலநிலை மாற்ற சவால்களை உறுதியுடனும், தென்னாடுகளின் பங்களிப்புடனும், எதிர்கொள்ள பிரதமர் முக்கிய பங்காற்றியதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

புத்தாக்க எரிசக்தி இலக்குகளை 8 ஆண்டுகளுக்கு முன்னதாகவே எட்டி ஜி-20 நாடுகளில் தலைமைத்துவ நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

தற்போது இந்தியா 260 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனை கொண்டிருப்பதாகவும், அடுத்த 4 ஆண்டுகளில் 500 ஜிகாவாட் தூய்மை எரிசக்தியாக இதனை மேம்படுத்த இந்தியா உறுதி பூண்டிருப்பதாகவும அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

கேப்ரில்லா சோமர்

ஈக்வெடார் வெளியுறவுத்துறை அமைச்சர் கேப்ரில்லா சோமர், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கரை புதுதில்லியில் இன்று சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

3 நாள் அரசுமுறை பயணமாக இன்று இந்தியா வந்துள்ள அவர், வர்த்தகம் விவசாயம், திறன் மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இதில் ஆலோசனை மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

OPEC

பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பான OPEC-அமைப்பிலிருந்து வரும் ஒன்றாம் தேதி முதல் ஐக்கிய அரபு அமீரகம் வெளியேற உள்ளதாக அறிவித்துள்ளது.

மேற்காசிய பதற்றம், சர்வதேச அளவிலான எரிசக்தி நெருக்கடி, உள்நாட்டு உற்பத்தி, நீண்டகால

பொருளாதார முன்னுரிமை உள்ளிட்டவைகளை அடிப்படையாக கொண்டு இம்முடிவு எடுக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>அர்ச்சனா பட்நாயக்</u>

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் 4-ம் தேதி எண்ணப்படவுள்ள நிலையில், வாக்கு எண்ணும் அதிகாரிகளுக்கான தீவிர பயிற்சி முகாம் மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

மாநிலம் முழுவதும் 62 வாக்கு எண்ணும் மையங்களில் பணியாற்றும் அலுவலர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தபால் வாக்கு எண்ணும் முறை, ஆவண பராமரிப்பு குறித்து இதில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இதனிடையே வாக்கு எண்ணும் பணிகளை கண்காணிப்பதற்காக வெளி மாநில தேர்தல் பார்வையாளர்கள் வரும் சனிக்கிழமை தமிழகம் வரவுள்ளனர்.

ஒரு தொகுதிக்கு ஒரு பார்வையாளர் என்ற அடிப்படையில் 234 I.A.S. அதிகாரிகள், பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் வாக்கு எண்ணிக்கை பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக தலைமை செயலாளர் திரு. சாய்குமார் சென்னை தலைமை செயலகத்தில் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

திருச்சி மாவட்டத்தில் வாக்கு எண்ணும் பணிக்காக நுண்பார்வையாளர்கள், உதவியாளர்கள் என தலா 17 பேர் வீதம்,
9 தொகுதிகளுக்கு 51 பேர் என மொத்தம் 459 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

## காவிரி நீர்

கபினி அணையிலிருந்து, தமிழகத்திற்கு 2.5 TMC தண்ணீரை திறந்து விட கர்நாடக அரசுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

புதுதில்லில் நடைபெற்ற காவிரி நதி நீர் மேலாண்மை ஆணையத்தின் ஆணையத்தின் 50-வது கூட்டத்தில் இதற்கான உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்த ஆணையத்தின் தலைவர் திரு. எஸ்.கே. ஹல்தர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகா மற்றும் புதுச்சேரி மாநில நீர்வளத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக மே மாதத்திற்கான 2.5 டி.எம்.சி தண்ணீரை திறந்து விட தமிழகம், கர்நாடகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖

## பாவேந்தர் பாரதிதாசன்

பாவேந்தர் பாரதிதாசனின் 136-வது பிறந்தநாளை ஒட்டி சென்னை மெரினா கடற்கரையில் காமராசர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில் மலர்த்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

## மாம்பழம்

தமிழ்நாட்டில் மாம்பழங்களை ரசாயனம் மூலம் செயற்கை முறையில் பழுக்க வைத்து விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உணவு பாதுகாப்புத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு முறைகேடு கண்டறியப்பட்டால் 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப் படுவதோடு, விற்பனை உரிமம் ரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>உதகை</u>

நீலகிரி மாவட்டம் கல்லட்டி மலைப்பாதையில் வெளிமாநில மற்றும் வெளி மாவட்ட சுற்றுலா வாகனங்கள் பயணிக்க இன்றுமுதல் முழுமையாக தடைவிதித்து மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து கர்நாடகா, கேரளம் உள்ளிட்ட வெளி மாநிலங்களிலிருந்து வரும் அனைத்து வாகனங்களும் கூடலூர் வழியாக திருப்பி அனுப்பப் படுகிறது.

இதனிடையே உதகையில் கோடை விழாவை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் கனரக வாகனங்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை மாவட்ட நிர்வாகம் விதித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>நீலகிரி</u>

நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டன் ராணுவ முகாமில் படைப்பிரிவு அதிகாரிகளுக்கான 36–வது கருத்தரங்கு இன்று நடைபெற்றது.

முன்னதாக போரில் உயிர்நீத்த ராணுவ வீரர்களுக்கு போர் நினைவுத்தூணில் தென்மேற்கு படைப்பிரிவின் தலைமை தளபதியும், படைப்பிரிவின் கர்னலுமான லெப்டினன்ட் ஜென்ரல் மஞ்ஜீந்தர் சிங் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>இருவரி</u>

சிவகங்கை மாவட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் தொழில் முனைவோருக்கு 9 கோடி ரூபாய் கடன்தொகை விடுவிக்கப் பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பொற்கொடி தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் தினத்தை ஒட்டி நாளைமறுநாள் தமிழகம் முழுவதும் மதுபானக்கடைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட விற்பனைக் கூடங்களை மூட அரசு உத்தரவிட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

கோவில்

சித்திரை பெருவிழா தேரோட்டம் பல்வேறு திருக்கோவில்களில் இன்று கோலாகலமாக நடைபெற்றது.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் சித்திரை திருவிழா தேரோட்டம் வெகுவிமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ...

இதேபோல் திருச்சி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானவர் சுவாமி திருக்கோவில் சித்திரை திருவிழா தேரோட்டமும் இன்று காலை நடைபெற்றது.

கடலூர் மாவட்டம் ஸ்ரீ முஷ்ணம் அருள்மிகு பூவராகவ சுவாமி திருக்கோவிலில் சித்திரை பெருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று காலை வெகுவிமரிசையாக நடைபெற்றது.

சங்கரன் கோவில் அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோவிலில் நடைபெற்ற தேரோட்டத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல காற்றழுத்த தாழ்வு காரணமாக நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நாளை கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

கஜகஸ்தான் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் மானஸ் தாம்னே முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர் நெதர்லாந்தின் கிஜேஸ் ப்ரௌவ்-வை 6-1, 6-1 என்ற நேர் செட்களில் இன்று அவர் வென்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்று இரவு ஏழரை மணிக்கு மும்பை இண்டியன்ஸ் – சன் ரைசர்ஸ் ஹைதராபாத்தை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖